# கட்டாய தமிழ் மொழி தகுதித் தேர்வு

# TRB (2024-2025)

**PG | SG | UG | BEO | COLLEGE TRB**
**POLYTECHNIC TRB | SPECIAL TEACHERS**

**27/30 Questions**

*Your Success is Our Goal...*



# தமிழ்

**TEACHER'S CARE PUBLICATION**
38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502
Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080

# TEACHER'S CARE PUBLICATION

## KANCHIPURAM

# தமிழ்

## கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வு

### CTET – SPECIAL GUIDE

### (PG TRB, UG TRB, SGTRB, TRB BEO & TNPSC)




## கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வு

## 2024 - 2025

வெளியீடு எண் : 01

முதல் பதிப்பு : ஜூலை, 2023

இரண்டாம் திருத்திய பதிப்பு : மே, 2024

உரிமைப்பதிவு (C) : Teacher’s Care Publication, Kanchipuram.

TCA

மின் அச்சுக்கோப்பு: Teacher’s Care Publication,
21/46, Vaigunda Perumal Koil Sannathi Street,
Kanchipuram.

அச்சிட்டோர்: Teacher’s Care Publication,
21/46, Vaigunda Perumal Koil Sannathi Street,
Kanchipuram.

# கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வு - 2024 - 2025

**(Compulsory Tamil Eligibility Test)**

**(PG TRB, UG TRB, SGTRB, TRB BEO & TNPSC)**

# கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வு சிறப்புக் கையேடு
# (Compulsory Tamil Eligibility Test – Special Guide)

கற்றலில் எளிமை

கற்றலில் புதுமை

கற்றலில் இனிமை….. இவையே!

**இச்சிறப்புக் கையேட்டின் தனிமை!**

- கட்டாயத் தமிழ்மொழித் தகுதித் தேர்வில் **உங்களை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் மிக எளிமையான வழிகாட்டி.**
- இச்சிறப்புக் கையேட்டின் பயிற்சி வினாக்களை நன்கு பயிற்சி செய்தால் **40% உச்சமதிப்பெண்களை நிச்சயம் உங்களால் எளிதில்** பெறமுடியும்.

கட்டாயத் தமிழ்மொழித் தகுதித் தேர்வு முறை:

- கொள்குறி வகை வினாக்கள் (OMR விடைத்தாள் மாதிரி)
- தரம் - பத்தாம் வகுப்பு
- காலம் - **30 நிமிடங்கள்**
- மதிப்பெண் – **50**
- **மொத்த வினாக்கள் – 30** - தேர்ச்சிக்கான குறைந்தபட்ச மதிப்பெண் **40%: (பகுதி – அ)**
  - (1 முதல் 20 வரை **– 2 மதிப்பெண்: (2 X 20 = 40)**
  - (21 முதல் 30 வரை **– 1 மதிப்பெண்: (1 X 10 = 10)**

உள்ளே….

- ✓ **விரிவான பாடப்பகுதிகள்**
- ✓ **முக்கிய குறிப்புகள்**
- ✓ **கொள்குறி வகை வினா - விடைகள்**
- ✓ **UG TRB, TRB BEO வினாத்தாள் விடைகளுடன்**
- ✓ **PG TRB மாதிரி வினாத்தாள் 2024-2025 உட்பட விடைகளுடன்**

TCA

**Teachers Care Publication**
**Old No; 21A, New No: 46 vaigundaperumal Kovil Street**
**Kanchipuram - 1**
**Mobile: 9566535080, 9786269980**

❖ இச்சிறப்புக் கையேட்டில் உள்ள அனைத்து இயல்களையும் ஆர்வத்துடன் அணுகி

**1) செய்யுள்**

**2) உரைநடை**

**3) இலக்கணம்**

**4) துணைப்படம்**

**5) மொழிப்பயிற்சி**

**6) திருக்குறள்**

**7) சந்திப்பிழை & அகர வரிசை**

ஆகிய தலைப்பில் பயிற்சி பெற்று தேர்ச்சிக்குறிய மதிப்பெண்களை பெறலாம்.

❖ இப்பகுப்பின் மூலம்,

படிப்பின் **அகலமும், ஆழமும்**

அறிவை விரிவுசெய்யும்!

தேர்வை எளிமை செய்யும்!

❖ ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தாலும் தேர்வில் வெற்றி பெறும் நோக்கில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. எதிர் வரும் அனைத்து அரசாங்க தேர்வுகளில் 40% பெறுவதற்கும். தேர்ச்சி அடைவதற்கும் இக்கையேடு,

உங்கள் கைகளில் தவழட்டும்

வெற்றிக் கனியைச் சுவைக்கட்டும்!!

❖ பயின்ற பாடங்களைச் சிந்திக்க கற்றல் செயல்பாடுகளாக, **வினா- விடைமுறை** (கொள்குறி) வகையில் **ஒவ்வொரு பகுதியும்** அமைக்கப்பட்டுள்ளன.

**கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வு சிறப்புக் கையேட்டின் தனித்தன்மைகள்:**

❖ பரந்துப்பட்ட பாடக் கருத்துக்கள்

❖ சொல் விளக்கங்கள்

❖ ஆழ்ந்தக் குறிப்புகள்

❖ ஒப்புமைச் செய்திகள்

❖ தனித்தக் குறிப்புகள்

❖ எளிமையான சான்றுகள்

❖ விரிவான அணுகுமுறை

❖ விரைவுக் குறியீடு

❖ பயிற்சி வினாக்கள்

❖ சுமாராக படித்தால் 40%, ஆழ்ந்து படித்தால் 100% நிச்சயம் பெறலாம்.

தகுதித் தேர்வில்
தகுதிப்படுத்தி
அரசுப் பணிக்கு
அழைத்துச் செல்லும்
தனித்துவம் கொண்ட கையேடு
கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வு
சிறப்புக் கையேடு.

**வெற்றிப்பெற வாழ்த்துக்கள்!**

இப்படிக்கு

**TCA – ஆசிரியர்கள் குழு & வல்லுநர் குழு**

2024 - 2025 - ஆம் ஆண்டு TRB தேர்வில் எதிர்பார்க்கப்படும் வினா அமைப்பு முறை

| | |
|---|---|
| உரைநடை | 08 |
| செய்யுள் | 08 |
| இலக்கணம் | 06 |
| துணைப்பாடம் | 03 |
| மொழிப்பயிற்சி | 02 |
| திருக்குறள் | 02 |
| அகரவரிசை | 01 |
| **மொத்தம்** | **30** |

முந்தைய UG TRB தேர்வில் கேட்கப்பட்ட வினா அமைப்பு முறை (2024)

| | 2 Mark | 1 Mark | T.Marks |
|---|---|---|---|
| உரைநடை | 05 | 03 | 08 |
| செய்யுள் | 03 | 02 | 05 |
| இலக்கணம் | 09 | - | 09 |
| துணைப்பாடம் | 01 | 03 | 04 |
| மொழிப்பயிற்சி | 01 | 02 | 03 |
| திருக்குறள் | 01 | - | 01 |
| **மொத்தம்** | **20** | **10** | **30** |

முந்தைய TRB BEO தேர்வில் கேட்கப்பட்ட வினா அமைப்பு முறை (2023)

| | 2 Mark | 1 Mark | T.Marks |
|---|---|---|---|
| உரைநடை | 03 | 01 | 04 |
| செய்யுள் | 04 | 04 | 08 |
| இலக்கணம் | 06 | 02 | 08 |
| துணைப்பாடம் | 02 | - | 02 |
| மொழிப்பயிற்சி | 02 | 01 | 03 |
| திருக்குறள் | 02 | 02 | 04 |
| அகரவரிசை | 01 | - | 01 |
| **மொத்தம்** | **20** | **10** | **30** |

# அலகு - 1 - உரைநடை

1.1 தமிழ்ச்சொல் வளம் – தேவநேயப்பாவாணர் 1

1.1.2. அடி வகை

1.1.3. கிளைப்பிரிவுகள்

1.1.4. கொழுந்து வகை - தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள்

1.1.5. பூவின் நிலைகள்

1.1.6. உலகப் பெருந்தமிழர் - தமிழ்த்திரு இரா. இளங்குமரனார்

1.1.7. பிஞ்சு வகை

1.1.8. குலை வகை

1.1.9. கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கும் சொற்கள்

1.1.10. பழத்தோல் வகை

1.1.11. மணிவகை

1.1.12. இளம் பயிர் வகை

பயிற்சி வினாக்கள் (103)

1.2 கேட்கிறதா என் குரல்! 11

1.2.1. காற்றின் பல பெயர்கள்

1.2.2. நான்கு திசையிலும் வீசும் காற்றின் பெயர்கள்

1.2.3. இலக்கியத்தில் காற்று

1.2.4. முந்நீர் நாவாய் ஓட்டியாக விளங்கும் காற்று

1.2.5. மழை தரும் காற்று

1.2.6. தடம் பதிக்கும் காற்று

1.2.7. ஆற்றலாகக் காற்று

1.2.8. மனிதனால் மாசடையும் காற்று

1.2.9. மரம் தரும் வரம் காற்று

1.2.10. ஹிப்பாலஸ் பருவக்காற்று

1.2.11. பின் வருத்தங்கள்

1.3 விருந்து போற்றுதும் 18

1.3.1. அறவுணர்வும் தமிழர் மரபும்

1.3.2. தனித்து உண்ணார்

1.3.3. அல்லில் ஆயினும்

1.3.4. இன்மையிலும் விருந்தோம்பல்

1.3.5. நிலத்திற்கேற்ற விருந்து

1.3.6. உற்றாரோடு நின்ற விருந்து`

1.3.7. விருந்தோம்பல் இன்று

1.3.8. ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பினர்

1.3.9. வாழை இலையில் விருந்து

1.4 நான்காம் தமிழ் - செயற்கை நுண்ணறிவு 23

1.4.1. மின்னணுப் புரட்சி

1.4.2. செயற்கை நுண்ணறிவு நமக்கு எப்படி அறிமுகமாகிறது?

1.4.3. தொழில்நுட்ப வரையறைகளின்படி

1.4.4. மெய்நிகர் உதவியாளர்

1.4.5. ஒளிப்படக்கருவியியல் செயற்கை நுண்ணறிவு

1.4.6. வாடிக்கையாளர் சேவை

1.4.7. ஏன் செயற்கை நுண்ணறிவு முதன்மையானது?

1.4.8. எதிர்காலத்தில்...

1.4.9. செயற்கை நுண்ணறிவின் பொதுவான கூறுகள்

1.4.10. கல்வியறிவு என்பது...

1.4.11. ஆனாலும் முன்னேற்றமே!

1.4.12. பெப்பர்

1.4.13. சீன நாட் டில் தமிழ்க் கல்வெட்டு!

பயிற்சி வினாக்கள் (18)

1.5 மொழிபெயர்ப்புக் கல்வி 29

1.5.1. மொழிபெயர்ப்பு - தொடக்கம்

1.5.2. மொழிபெயர்ப்பு - தேவை

1.5.3. மொழிபெயர்ப்புக் கல்வி

1.5.4. இலக்கிய இறக்குமதி

1.5.5. மொழிபெயர்ப்பு - செம்மை

1.5.6. பல்துறை வளர்ச்சி

1.5.7. மொழிபெயர்ப்பு - பயன்

1.5.8. மொழிவளர்ச்சி

1.5.9. எதை மொழிபெயர்ப்பது?

1.5.10. செய்ய வேண்டுவன

பயிற்சி வினாக்கள் (28)

1.6 நிகழ்கலை 37

1.6.1. கரகாட்டம்

1.6.2. மயிலாட்டம்

1.6.3. காவடியாட்டம்

1.6.4. ஒயிலாட்டம்

1.6.5. தேவராட்டம், சேர்வையாட்டம்

1.6.6. பொய்க்கால் குதிரையாட்டம்

1.6.7. தப்பு ஆட்டம்

1.6.8. புலி ஆட்டம்

1.6.9. தெருக்கூத்து

1.6.10. தோற்பாவைக் கூத்து

பயிற்சி வினாக்கள் (51)

1.7 சிற்றகல் ஒளி – ம.பொ.சிவஞானம் (சிலம்புச் செலவர்) (தன் வரலாறு) 44

1.7.1. ம.பொ.சிவஞானம் அவர்கள் தன் வராலாறு கூறும் கட்டுரை

1.7.2. வறுமையால் இழந்த கல்வி

1.7.3. செவிச்செல்வம் பெற்றேன்

1.7.4. புத்தகப்பித்தன்

1.7.5. பேராயக் கட்சி (காங்கிரஸ் கட்சி)

1.7.6. ஆறுமாதக் கடுங்காவல்

1.7.7. 'தமிழகம்' பற்றிய கனவு

1.7.8. சென்னையை மீட்டோம்

1.7.9. தெற்கெல்லைப் போராட்டம்

1.7.10. மார்ஷல் ஏ. நேசமணி

பயிற்சி வினாக்கள் (27)

1.8 சங்க இலக்கியத்தில் அறம் 51

1.8.1. அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை

1.8.2. அரசியல் அறம்

1.8.3. அறங்கூறவையம்

1.8.4. போர் அறம்

1.8.5. கொடை

1.8.6. உதவி

1.8.7. வாய்மை

பயிற்சி வினாக்கள் (34)

1.9. ஜெயகாந்தம் (1934 - 2015) நினைவு இதழ் 55

1.9.1. மொழி பெயர்ப்புகள்

1.9.2. விருதுகள்

பயிற்சி வினாக்கள் (22)

1.10. விடைகள் 58

## அலகு - 2 - இலக்கணம்


| | | |
|---|---|---|
| 2. 1. | எழுத்து, சொல் | 61 |
| | **2.1.1. சொல்** | |
| 2.2. | தொகைநிலைத் தொடர்கள் | 66 |
| 2.3. | தொகாநிலைத் தொடர் | 69 |
| 2.4. | பொது | 71 |
| 2.5. | வினா, விடை வகைகள், பொருள்கோள் | 75 |
| 2.6. | அகப்பொருள் இலக்கணம் | 80 |
| 2.7. | புறப்பொருள் இலக்கணம் | 87 |
| 2.8. | பா - வகை, அலகிடுதல் | 90 |
| 2.9. | அணி | 94 |
| 2.10 | விடைகள் | 96 |


## அலகு - 3 – துணைப்பாடம்


| | | |
|---|---|---|
| 3.1. | உரைநடையின் அணிநலன்கள் – எழில்முதல்வன் | 98 |
| 3.2. | புயலிலே ஒரு தோணி - ப.சிங்காரம் | 103 |
| 3.3. | கோபல்லபுரத்து மக்கள் - கி.ராஜநாராயணன் | 107 |
| 3.4. | விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை | 111 |
| 3.5. | புதிய நம்பிக்கை – கமலாலயன் | 115 |
| 3.6. | பாய்ச்சல் - சா. கந்தசாமி | 121 |
| 3.7. | மங்கையராய்ப் பிறப்பதற்கே | 124 |
| | **3.7.1. எம்.எஸ்.சுப்புலட்சுமி** | |
| | **3.7.2. பாலசரஸ்வதி** | |
| | **3.7.3. ராஜம் கிருஷ்ணன்** | |
| | **3.7.4. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்** | |
| | **3.7.5. சின்னப்பிள்ளை** | |
| 3.8. | இராமானுசர் – நாடகம் | 129 |
| 3.9. | ஒருவன் இருக்கிறான் - கு. அழகிரிசாமி | 132 |
| 3.10. | விடைகள் | 137 |


## அலகு - 4 – மொழிப்பயிற்சி


| | | |
|---|---|---|
| 4.1. | I | |
| | **4.1.1.** கலைச்சொற்கள் | 138 |
| | **4.1.2.** மொழிபெயர்ப்பு | 139 |
| | **4.1.3.** தமிழ் நூல்களும் ஆசிரியரும் | 143 |
| | **4.1.4.** அகராதி கண்டு பொருள் கூறுக | 144 |

4.2. II

4.2.1. இயல் 1 - தொகுப்பு 146
4.2.2. இயல் 2 - தொகுப்பு 148
4.2.3. இயல் 3 - தொகுப்பு 151
4.2.4. இயல் 4 - தொகுப்பு 153
4.2.5. இயல் 5 - தொகுப்பு 155
4.2.6. இயல் 6 - தொகுப்பு 156
4.2.7. இயல் 7 - தொகுப்பு 159
4.2.8. இயல் 8 - தொகுப்பு 160
4.2.9. இயல் 9 - தொகுப்பு 162

4.3. விடைகள் 165

## அலகு - 5 – செய்யுள்

5.1. அன்னை மொழியே – பாவலரேறு பெருஞ்சித்திரனார் 166
5.1.1. இரட்டுறமொழிதல் – சந்தக் கவிமணி தமிழழகனார் 168
5.2. காற்றே வா – பாரதியார் 170
5.2.1. முல்லைப்பாட்டு – நப்பூதனார் 172
5.3. காசிக்காண்டம் – அதிவீரராம பாண்டியர் 174
5.3.1. மலைபடுகடாம் - பெருங்கௌசிகனார் 176
5.3.2. திருக்குறள் - திருவள்ளுவர் 178
5.4. பெருமாள் திருமொழி – குலசேகராழ்வார் 181
5.4.1. பரிபாடல் – கீரந்தையார் 182
5.5. நீதிவெண்பா - கா.ப. செய்குதம்பிப் பாவலர் 184
5.5.1. திருவிளையாடற்புராணம் – பரஞ்சோதி முனிவர் 186
5.6. பூத்தொடுத்தல் – உமா மகேஸ்வரி 190
5.6.1. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் – குமரகுருபரர் 191
5.6.2. கம்பராமாயணம் – கம்பர் 194
5.6.3. திருக்குறள் - திருவள்ளுவர் 198
5.7. ஏர் புதிதா – கு.ப.ராஜகோபாலன் 202
5.7.1. மெய்க்கீர்த்தி – இரண்டாம் இராசராச சோழன் 203
5.7.2. சிலப்பதிகாரம் – இளங்கோவடிகள் 205
5.8. ஞானம் – தி.சொ. வேணுகோபாலன் 209
5.8.1. காலக்கணிதம் – கண்ணதாசன் 210

5.9. சித்தாளு – நாகூர்ரூமி 212

5.9.1. தேம்பாவணி – வீரமாமுனிவர் 213

5.10. விடைகள் 216

## அலகு - 6 – திருக்குறள்

6.1. அதிகாரங்கள் 220

- **ஒழுக்கமுடைமை (14)**
- **மெய் உணர்தல் (36)**
- **பெரியாரைத் துணைக்கோடல் (45)**
- **கொடுங்கோன்மை (56)**
- **கண்ணோட்டம் (58)**
- **ஆள்வினையுடைமை (62)**
- **அமைச்சு (64)**
- **பொருள்செயல்வகை (76)**
- **கூடா நட்பு (83)**
- **பகை மாட்சி (87)**
- **நன்றியில் செல்வம் (101)**
- **குடிசெயல்வகை (103)**
- **நல்குரவு (105)**
- **இரவு (106)**
- **கயமை (108)**

| | | |
|---|---|---|
| 7.1. | சந்திப்பிழை (ம) வல்லினம் மிகும்/மிகா இடங்கள் | 234 |
| 7.2. | அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல் | 237 |
| 8.1. | UG TRB 2024 - தமிழ் கட்டாய தகுதித் தேர்வு வினாக்கள் | 239 |
| 8.2. | TRB BEO 2023 - தமிழ் கட்டாய தகுதித் தேர்வு வினாக்கள் | 242 |
| 8.3. | தமிழ் மொழி இலக்கியத் திறனறித் தேர்வு (2023) வினாக்கள் | 244 |
| | விடைகள்: 8.1, 8.2 & 8.3 | 252 |

## கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வு சிறப்புக் கையேடு


- பயிற்சி வினாக்கள் 255
- OMR விடைத்தாள் 264
- விடைகள் 265

# 1. உரைநடை

## 1.1. தமிழ்ச்சொல் வளம் - மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர் (க)



- **தமிழ்ச் சொல்வளத்தைப் பலதுறைகளிலும் காணலாம்.**
- **இங்குப் பயிர்வகை சொற்கள் மட்டும் சிறப்பாக எடுத்துக்காட்டப் பெறும்.**
- **கால வெள்ளத்தில் கரைந்து போன மொழிகளுக்கிடையில் நீந்தி தம்மை நிலைநிறுத்திக் கொண்டது -** தமிழ்.
- **“என்ன வளம் இல்லை என்று“ எண்ணி வியக்க வைக்கும் சிறப்பியல்புகளைக் கொண்ட மொழி -** தமிழ்.
- சொல் வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் **பொதுவேனும்**, தமிழ்மட்டும் அதில் தலைச் சிறந்ததாகும்.
- **“நாடும் மொழியும் இரு கண்கள்”** என்று கூறியவர் மகாகவி பாரதியார்.





- “தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள ஒருபொருட் பல சொல் வரிசைகள் அவற்றில் இல்லாக் குறை தமிழறிஞர்க்கு மிகத் தெளிவாகத் தோன்றும்.
- “தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்கு உரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள" என்று ஆராய்ந்து கூறுகிறார் கால்டுவெல். **(திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் கால்டுவெல் அவர்களால்1856 ஆண்டு எழுதப்பட்டது).**

### 1.1.2. அடி வகை


ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள்.

- ✓ **தாள்:** நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி
- ✓ **தண்டு:** கீரை, வாழை முதலியவற்றின் அடி
- ✓ **கோல்:** நெட்டி, மிளகாய்ச்செடி முதலியவற்றின் அடி
- ✓ **தூறு:** குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி




ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள்.

- ✓ **தட்டு அல்லது தட்டை :** கம்பு, சோளம் முதலியவற்றின் அடி
- ✓ **கழி :** கரும்பின் அடி
- ✓ **கழை :** மூங்கிலின் அடி
- ✓ **அடி :** புளி, வேம்பு முதலியவற்றின் அடி.





### 1.1.3. கிளைப்பிரிவுகள்

**தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்கள்.**

- ✓ **கவை:** அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை
- ✓ **கொம்பு அல்லது கொப்பு:** கவையின் பிரிவு
- ✓ **கிளை:** கொம்பின் பிரிவு
- ✓ **சினை:** கிளையின் பிரிவு
- ✓ **போத்து:** சினையின் பிரிவு
- ✓ **குச்சு:** போத்தின் பிரிவு
- ✓ **இணுக்கு:** குச்சியின் பிரிவு

TCA


தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்கள்.




காய்ந்த அடியும் கிளையையும் குறிக்கும் சொற்கள்


- ✓ **சுள்ளி** : காய்ந்த குச்சு (குச்சி)
- ✓ **விறகு** : காய்ந்த சிறுகிளை
- ✓ **வெங்கழி** : காய்ந்த கழி
- ✓ **கட்டை** : காய்ந்த கொம்பும் கவையும் அடியும்

காய்ந்த அடியும் கிளையையும் குறிக்கும் சொற்கள்






| கொழுந்து வகை - தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள் | |
|---|---|
| **துளிர் அல்லது தளிர்** | : நெல், புல் முதலியவற்றின் கொழுந்து |
| **முறி அல்லது கொழுந்து** | : புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து |
| **குருத்து** | : சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து |
| **கொழுந்தாடை** | : கரும்பின் நுனிப்பகுதி |

### 1.1.4. கொழுந்து வகை - தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள்




- ➢ **துளிர் அல்லது தளிர்:** நெல், புல் முதலியவற்றின் கொழுந்து.
- ➢ **முறி அல்லது கொழுந்து:** புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து.
- ➢ **குருத்து:** சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து
- ➢ **கொழுந்தாடை:** கரும்பின் நுனிப்பகுதி.






### 1.1.5. பூவின் நிலைகள்

- பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள்.

◆(வினா :13 த.மொ.இ.தி. தேர்வு 2023)

- ✓ ◆**அரும்பு:** பூவின் தோற்றநிலை
- ✓ ◆**போது:** பூ விரியத் தொடங்கும் நிலை
- ✓ **மலர்(அலர்):** பூவின் மலர்ந்த நிலை
- ✓ ◆**வீ:** மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை
- ✓ **செம்மல்: பூ வாடின நிலை** (TRB BEO 2023)

### 1.1.6. உலகப் பெருந்தமிழர் - தமிழ்த்திரு இரா. இளங்குமரனார்.



- இவர் தமிழாசிரியர்.
- நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர்.
- சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்.
- திருச்சிராப்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள அல்லூரில் **"திருவள்ளுவர் தவச்சாலை"** ஒன்றை அமைத்திருப்பவர்.



பாவாணர் நூலகம்

- பாவாணர் நூலகம் ஒன்றை உருவாக்கியவர்.
- தமிழகம் முழுவதும் திருக்குறள் சொற்பொழிவுகளை வழங்கி வருபவர்.
- தமிழ்வழித் திருமணங்களை நடத்தி வருபவர்.
- விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழந்து விடக்கூடாது என்று எண்ணியவர்.
- தமிழ்த்தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர்.
- இன்றளவும் இவ்வாறே எழுதித் தமிழுக்குத் தனிப்பெரும் புகழை நல்கி வருபவர்.




- இயற்றியவை: **இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், பாவாணர் வரலாறு, குண்டலகேசி உரை, யாப்பருங்கலம் உரை, புறத்திரட்டு உரை, திருக்குறள் தமிழ் மரபுரை, காக்கைப்பாடினிய உரை, தேவநேயம் முதலியவை)**
- தமிழ்ப் பணியைத் தரமுயர்த்திய நல்முத்துக்களில் இவரும் ஒருவர்.

### 1.1.7. பிஞ்சு வகை


**தாவரத்தின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கும் சொற்கள்.**

- ❖ **பூம்பிஞ்சு** : பூவோடு கூடிய இளம்பிஞ்சு
- ❖ **பிஞ்சு** : இளம் காய்
- ❖ **வடு** : மாம்பிஞ்சு
- ❖ **கவ்வை** : எள்பிஞ்சு
- ❖ **முட்டுக் குரும்பை:** சிறு குரும்பை
- ❖ **இளநீர்** : முற்றாத தேங்காய்
- ❖ **நுழாய்** : இளம்பாக்கு
- ❖ **கருக்கல்** : இளநெல்
- ❖ **கச்சல்:** வாழைப்பிஞ்சு (த.தி.தே- அக் - 2022)
- ❖ **குரும்பை:** தென்னை, பனை முதலியவற்றின் இளம் பிஞ்சு
- ❖ **மூசு:** பலாப்பிஞ்சு (த.தி.தே- அக் - 2022)



## 1.1.8. குலை வகை

தாவரங்களின் குலை வகைகளைக் குறிப்பதற்கான (காய்களையோ கனிகளையோ) சொற்கள்:




## 1.1.9. கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கும் சொற்கள்

- **சூம்பல்:** நுனியில் சுருங்கிய காய்
- **சிவியல்:**சுருங்கிய பழம்
- **சொத்தை:** புழுபூச்சி அரித்த காய் அல்லது கனி





- **வெம்பல்:** சூட்டினால் பழுத்த பிஞ்சு
- **அளியல்:** குளுகுளுத்த பழம்
- **அழுகல்:** குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய்
- **சொண்டு:** பதராய்ப் போன மிளகாய்
- **கோட்டான் காய் அல்லது கூகைக்காய்:** கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்ட காய்
- **தேரைக்காய்:** தேரை அமர்ந்ததினால் கெட்டகாய்
- **அல்லிக்காய் :** தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய்
- **ஒல்லிக்காய்:** தென்னையில் கெட்ட காய்.

## 1.1.10. பழத்தோல் வகை

பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்கள்:

- **தொலி:** மிக மிக மெல்லியது
- ***தோல் :*** திண்ணமானது
- **தோடு:** வன்மையானது
- **ஓடு:** மிக வன்மையானது
- **குடுக்கை:** சுரையின் ஓடு
- **மட்டை:** தேங்காய் நெற்றின் மேற்பகுதி
- **உமி:** நெல், கம்பு முதலியவற்றின் மூடி
- **கொம்மை:** வரகு, கேழ்வரகு முதலியவற்றின் உமி





## 1.1.11. மணிவகை (TRB BEO 2023)

தானியங்களுக்கு வழங்கும் சொற்கள்:

- **கூலம் :** நெல்,புல் (கம்பு) முதலிய தானியங்கள்
- **விதை:** கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து
- **காழ்:** புளி, காஞ்சிரை (நச்சு மரம்) முதலியவற்றின் வித்து
- **முத்து:** வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின் வித்து
- **கொட்டை:** மா, பனை முதலியவற்றின் வித்து
- **தேங்காய்:** தென்னையின் வித்து
- **முதிரை:** அவரை, துவரை முதலிய பயறுகள்
- **பயறு:** அவரை, உளுந்து முதலியவை;
- **கடலை:** வேர்க்கடலை, கொண்டைக்கடலை முதலியவை



### 1.1.12. இளம் பயிர் வகை




**தாவரங்களின் இளம் பருவத்திற்கான சொற்கள்:**

- **நாற்று:** நெல், கத்தரி முதலியவற்றின் இளநிலை
- **கன்று:** மா, வாழை முதலியவற்றின் இளநிலை
- **குருத்து:** வாழையின் இளநிலை
- **பிள்ளை:** தென்னையின் இளநிலை
- **குட்டி:** விளாவின் இளநிலை
- **மடலி** அல்லது **வடலி:** பனையின் இளநிலை
- **பைங்கூழ்:** நெல்,சோளம் முதலியவற்றின் பசும் பயிர்

- ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம் புல மக்களாலும் அமையப்பெறும்.
- தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்துணையோ ஆராய்ச்சிகள் நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க **Leaf** என ஒரு சொல் மட்டுமே உள்ளது.
- ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனர்.
- தமிழ்ப் பொதுமக்களைப் போல வன்மை, மென்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு **தாள், இலை, தோகை, ஓலை** எனப் பாகுபாடு செய்யவில்லை.
- இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது முன்னர்க் காட்டப்பெற்றது.
- தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையது என்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.
- பிறநாடுகளிலுள்ள சில கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்டனவாகவும் இருக்க தமிழ்நாட்டில் உள்ளவையோ, பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன.


சம்பாக்கோதுமை வாற்கோதுமை குண்டுக்கோதுமை

- **எடுத்துக்காட்டாக**, கோதுமையை எடுத்துக்கொண்டால் அதில் சம்பாக்கோதுமை, குண்டுக்கோதுமை, வாற்கோதுமை முதலிய சிலவகைகளே உண்டு.
- ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ, **செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா, மட்டை, கார்** என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, ◆குண்டுச்சம்பா, குதிரைவாலிச்சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச்சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.
- இவற்றோடு ◆**வரகு,** ◆**காடைக்கண்ணி,** ◆**குதிரைவாலி (Barnyard Millet)** முதலிய சிறுகூலங்கள் தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளைவதில்லை.

◆**(வினா :86 த.மொ.இ.தி.தேர்வு 2023)**


வரகு காடைக்கண்ணி குதிரைவாலி

- **தமிழ்நாட்டிலும் குறிப்பாக தென்னாட்டிலேயே அவை மிகுதியாக விளைகின்றன.**
- பழங்காலத்தில் விளைந்த அளவு பொன்னும் மணியும் முத்தும் பவளமும் இன்று விளையாவிடினும் அருமையான கூலங்களும் சிறு கூலங்களும் இன்றும் தென்தமிழ் நாட்டில் விளைந்து வருவது கண்கூடு.
- ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.
- நாட்டின் தனிப்பெரும் வளத்தினாலேயே, பண்டைத் தமிழ்மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்திருக்கின்றனர். திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும்.
- பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு செய்து அவற்றிற்கேற்பப் பருப்பொருட் சொற்களும் நுண்பொருட் சொற்களும் அமைத்துக்கொள்வது , சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலும்.

> *உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவே. மாநாட்டுக்குரிய அம்முதல் மொழியும் தமிழே.*
>
> *- பன்மொழிப் புலவர் க.அப்பாத்துரையார்*



- பாவாணர், தமிழ்ச்சொல்வளம் கட்டுரையில் **வித்துவகை, வேர்வகை, அரிதாள் வகை, காய்ந்த இலைவகை, இலைக்காம்பு வகை, பூமடல் வகை, அரும்பு வகை, பூக்காம்பு வகை, இதழ்வகை, காய்வகை, கனி வகை, உள்ளீட்டு வகை, தாவரக் கழிவு வகை, விதைத்தோல் வகை, பதர் வகை, பயிர் வகை, கொடி வகை, மர வகை, கரும்பு வகை, காய்ந்த பயிர் வகை, வெட்டிய விறகுத் துண்டு வகை, மரப் பட்டை வகை, பயிர்ச்செறிவு வகை, நிலத்தின் தொகுப்பு வகை, செய் வகை, நில வகை, நன்செய் வகை, வேலி வகை, காட்டு வகை** ஆகியவற்றின் சொல்வளங்களையும் விளக்கியுள்ளார்.



- மொழிஞாயிறு என்றழைக்கப்படும் தேவநேயப் பாவாணரின் **சொல்லாய்வுக் கட்டுரைகள்** (TRB BEO 2023) நூலில் உள்ள தமிழ்ச்சொல் வளம் என்னும் கட்டுரையின் சுருக்கம் பாடமாக இடம்பெற்றுள்ளது. (த.தி.தேர்வு - அக்டோபர் - 2022)
- பல்வேறு இலக்கணக் கட்டுரைகளையும் மொழியாராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதிய பாவாணர், தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர்.




- உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர். மேலும், தேவநேயப் பாவாணரின் நூல்கள், தமிழர் மதம், செந்தமிழ் சிறப்பு, தமிழர் வரலாறு, திரவிடத்தாய்.



## நினைவில் நிறுத்துவோம்

கடல்கடந்து முதலில் அச்சேறிய தமிழ் (TRB BEO 2023)




- **போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் லிசுபனில், 1554இல்** கார்டிலா **என்னும் நூல் முதன் முதலாகத் தமிழ்மொழியில்தான் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூல் ரோமன் வரிவடிவில் அச்சிடப்பட்டுள்ளது.** (TRB BEO 2023)
- ரோமன் எழுத்துருவில் வெளிவந்த இதன் முழுப்பெயர் Carthila de lingoa Tamule Portugues.
- இது அன்றைய காலத்திலேயே இரு வண்ணங்களில் (கறுப்பு, சிவப்பு) மாறிமாறி நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது.
- இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறியது தமிழ்தான். (செய்தி- ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்)

பின்வரும் நிலவகைகளின் பெயர்களுக்கான காரணங்களைத் தெரிந்து கொள்ளல்

**தரிசு, சிவல், கரிசல், முரம்பு, புறம்போக்கு, சுவல், அவல்**

**தரிசு:** பயிர், செய்யப்படாமல் கிடக்கும் நிலம்

**சிவல்:** சிவப்பு நிறமாக இருக்கும் நிலம்.

**கரிசல்:** கருப்பு நிறமாக இருக்கும் நிலம்.

**முரம்பு:** பருக்கைக் கல்லுள்ள மேட்டு நிலம்.

**புறம்போக்கு:** அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நிலம்.

**சுவல்:** மேடான பகுதியிலுள்ள நிலம்.

**அவல்:** பள்ளமான பகுதியிலுள்ள நிலம்.

ஒரு பொருள் தரும் பலசொற்களைப் பட்டியலிடுக: (TRB BEO 2023)

எ.கா: சொல்லுதல் - பேசுதல், செப்புதல், உரைத்தல், கூறுதல், இயம்புதல், மொழிதல்.

**கிளி** - தத்தை, சுகம், கிள்ளை.

**குழந்தை** - மகவு, குழவி, சேய், பிள்ளை.

**நெருப்பு** - தீ, அனல், கனல், சுடர்.

**பெண்** - நங்கை, மங்கை, வனிதை.

**சொல்** - பதம், கிளவி, மொழி.

**வயல்** - கழனி, தரிசு, பழனம், செய்.

**சூரியன்** - ஞாயிறு, கதிரவன், பகலவன், வெய்யோன்.

## பயிற்சி வினாக்கள்

**1. கீழ்க்கண்டவற்றுள் தாவரத்தின் அடியைக் குறிப்பதற்கான சொல் அல்லாதது எது?**

(அ) இலை (ஆ) தண்டு (இ) தாள் (ஈ) கோல்

**2. நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி எவ்வாறு அழைக்கப்படும்?**

(அ) தூறு (ஆ) தண்டு (இ) தாள் (ஈ) கோல்

**3. கீரை,வாழை முதலியவற்றின் அடி எவ்வாறு அழைக்கப்படும்?**

அ) தூறு (ஆ) தண்டு (இ) தாள் (ஈ) கோல்

**4. குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி எவ்வாறு அழைக்கப்படும்?**

அ) தூறு (ஆ) தண்டு (இ) தாள் (ஈ) கோல்

**5. பொருத்தி விடை தேர்க**

**a) தாள் - 1) மிளகாய்ச்செடி**

**b) தண்டு - 2) கேழ்வரகு**

**c) கோல் - 3) புதர்**

**d) தூறு - 4) கீரை**

(அ) 2,4,1,3 (ஆ) 2,1,4,3 (இ) 4,3,2,1 (ஈ) 4,1,2,3

**6. தாள் என்பது எதன் அடிப்பகுதியைக் குறிக்கும் சொல்?**

அ) நெல் (இ) வாழை (இ) நெட்டி (ஈ) குத்துச்செடி

**7. கால்டுவெல் அவர்கள் எழுதிய நூல்?**

அ) திராவிட மொழிக் கூறுகள்

(ஆ) திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம்

(இ) திராவிட மொழிகளின் அணி இலக்கணம்

(ஈ) திராவிட மொழிகளின் சொல்லிலக்கணம்

**8. கம்பு, சோளம் முதலியவற்றின் அடி எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) அடி (ஆ) கழி

(இ) கழை (ஈ) தட்டு அல்லது தட்டை

**9. கரும்பின் அடி எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) அடி (ஆ) கழி

(இ) கழை (ஈ) தட்டு அல்லது தட்டை

**10. மூங்கிலின் அடி எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

(அ) அடி (ஆ) கழி

(இ) கழை (ஈ) தட்டு அல்லது தட்டை

**11. புளி, வேம்பு முதலியவற்றின் அடி எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) அடி (ஆ) கழி

(இ) கழை (ஈ) தட்டு அல்லது தட்டை

**12. பொருத்தி விடை தேர்க**

**a) கழை - 1) சோளம்**

**b) அடி - 2) கரும்பு**

**c) கழி - 3) புளி**

**d) தட்டை - 4) மூங்கில்**

(அ) 2,4,1,3 (ஆ) 2,1,4,3

(இ) 4,3,2,1 (ஈ) 4,1,2,3

**13. அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) கவை (ஆ) போத்து (இ) சினை (ஈ) குச்சு

**14. கவையின் பிரிவு எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) கொம்பு (ஆ) போத்து (இ) சினை (ஈ) குச்சு

**15. கிளையின் பிரிவு எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) கொம்பு (ஆ) போத்து (இ) சினை (ஈ) குச்சு

**16. சினையின் பிரிவு எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) கொம்பு (ஆ) போத்து (இ) சினை (ஈ) குச்சு

**17. போத்தின் பிரிவு எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) கொம்பு (ஆ) போத்து (இ) சினை (ஈ) குச்சு

**18. இணுக்கு என்பது ______________**

அ) கொம்பின் பிரிவு (ஆ) போத்தின் பிரிவு

(இ) சினையின் பிரிவு (ஈ) குச்சியின் பிரிவு

**19. பொருத்தி விடை தேர்க**

**a) கவையின் பிரிவு - 1) குச்சு**

**b) போத்தின் பிரிவு - 2) சினை**

**c) கிளையின் பிரிவு - 3) இணுக்கு**

**d) குச்சியின் பிரிவு - 4) கொம்பு**

(அ) 2,4,1,3 (ஆ) 2,1,4,3 (இ) 4,3,2,1 (ஈ) 4,1,2,3

**20. புளி, வேம்பு முதலியவற்றின் இலை எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) இலை (ஆ) தாள் (இ) ஓலை (ஈ) சண்டு

**21. நெல்,புல் முதலியவற்றின் இலை எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) இலை (ஆ) தாள் (இ) ஓலை (ஈ) சண்டு

**22. சோளம், கரும்பு முதலியவற்றின் இலை எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) சருகு (ஆ) தோகை (இ) ஓலை (ஈ) சண்டு

**23. காய்ந்த தாளும் தோகையும் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) சருகு (ஆ) தோகை (இ) ஓலை (ஈ) சண்டு

**24. காய்ந்த இலை எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) சருகு (ஆ) தோகை (இ) ஓலை (ஈ) சண்டு

**25. பொருத்தி விடை தேர்க**

**a) தாள் - 1) சோளம்**

**b) இலை - 2) புல்**

**c) தோகை - 3) ஓலை**

**d) தென்னை - 4) வேம்பு**

(அ) 2,4,1,3 (ஆ) 2,1,4,3 (இ) 4,3,2,1 (ஈ) 4,1,2,3

**26. பொருந்தாத இணைகளைத் தேர்க.**

**1) தட்டு - கம்பு**

**2) கழி - கேழ்வரகு**

**3) அடி - சோளம்**

**4) கழை - மூங்கில்**

(அ) 2,3 (ஆ) 2,1 (இ) 4,3 (ஈ) 4,1

**27. சுள்ளி என்பது ___________**

அ) காய்ந்த கொம்பு (ஆ) காய்ந்த சிறுகிளை

(இ) காய்ந்த கழி (ஈ) காய்ந்த குச்சு

**28. காய்ந்த சிறுகிளை எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) சுள்ளி (ஆ) விறகு (இ) வெங்கழி (ஈ) கட்டை

**29. வெங்கழி என்பது ____________**

அ) காய்ந்த கொம்பு (ஆ) காய்ந்த சிறுகிளை

(இ) காய்ந்த கழி (ஈ) காய்ந்த குச்சு

**30. காய்ந்த கொம்பும் கவையும் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) சுள்ளி (ஆ) விறகு (இ) வெங்கழி (ஈ) கட்டை

**31. பொருத்தி விடை தேர்க**

**a) சுள்ளி - 1) காய்ந்த கொம்பு**

**b) விறகு - 2) காய்ந்த கழி**

**c) வெங்கழி - 3) காய்ந்த சிறுகிளை**

**d) கட்டை - 4) காய்ந்த குச்சு**

(அ) 2,4,1,3 (ஆ) 2,1,4,3 (இ) 4,3,2,1 (ஈ) 4,1,2,3

**32. பொருந்தாத இணைகளைத் தேர்க.**

**1) சுள்ளி - காய்ந்த குச்சு**

**2) விறகு - காய்ந்த சிறுகிளை**

**3) வெங்கழி - காய்ந்த கொம்பு**

**4) கட்டை - காய்ந்த கழி**

(அ) 2,3 (ஆ) 2,1 (இ) 4,3 (ஈ) 4,1

**33. நெல், புல் முதலியவற்றின் கொழுந்து எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) துளிர் அல்லது தளிர் (ஆ) முறி அல்லது கொழுந்து

(இ) குருத்து (ஈ) கொழுந்தாடை

**34. புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) துளிர் அல்லது தளிர் (ஆ) முறி அல்லது கொழுந்து

(இ) குருத்து (ஈ) கொழுந்தாடை

**35. சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

(அ) துளிர் அல்லது தளிர் (ஆ) முறி அல்லது கொழுந்து

(இ) குருத்து (ஈ) கொழுந்தாடை

**36. கரும்பின் நுனிப்பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

(அ) துளிர் அல்லது தளிர்

(ஆ) முறி அல்லது கொழுந்து

(இ) குருத்து (ஈ) கொழுந்தாடை

**37. பொருந்தாத இணைகளைத் தேர்க.**

**1) நெல் - முறி அல்லது கொழுந்து**

**2) புளி - துளிர் அல்லது தளிர்**

**3) சோளம் - குருத்து**

**4) தென்னை - குருத்து**

(அ) 2, 3 (ஆ) 2,1 (இ) 4, 3 (ஈ) 4, 1

**38. பூவின் தோற்றநிலை _________**

(அ) அரும்பு (ஆ) போது (இ) மலர் (ஈ) வீ

**39. பூ விரியத் தொடங்கும் நிலை எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

(அ) அரும்பு (ஆ) போது (இ) மலர் (ஈ) வீ

**40. பூவின் மலர்ந்த நிலை என்பது எது?**

(அ) அரும்பு (ஆ) போது (இ) மலர் (ஈ) வீ

**41. மரஞ்செடியினின்று பூ கீழேவிழுந்த நிலை எது?**

(அ) அரும்பு (ஆ) போது (இ) மலர் (ஈ) வீ

**42. பொருந்தாத இணைகளைத் தேர்க.**

**1) அரும்பு - பூவின் தோற்றநிலை**

**2) போது - பூவின் மலர்ந்த நிலை**

**3) மலர் - பூ விரியத் தொடங்கும் நிலை**

**4) வீ - மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை**

(அ) 2,3 (ஆ) 2,1 (இ) 4,3 (ஈ) 4,1

**43. பூ வாடின நிலை என்பது எது?**

(அ) அரும்பு (ஆ) செம்மல் (இ) மலர் (ஈ) வீ

**44. உலகத் பெருந்தமிழர் என்று அழைக்கப்படக்கூடியவர்?**

(அ) இரா.இளங்குமரனார் (ஆ) தனிநாயக அடிகளார்

(இ) மறைமலை அடிகளார் (ஈ) குன்றக்குடி அடிகளார்

**45. இரா.இளங்குமரனார் அவர்கள் இயற்றாத நூல் எது?**

அ) தமிழிசை இயக்கம் ஆ) நன்னூல் உரை

(இ) யாப்பருங்கலம் உரை (ஈ) குண்டலகேசி உரை

**46. காக்கைப்பாடினிய உரை என்ற நூலை இயற்றியவர்?**

(அ) இரா.இளங்குமரனார் (ஆ) தனிநாயக அடிகளார்

(இ) மறைமலை அடிகளார் (ஈ) குன்றக்குடி அடிகளார்

**47. பூவோடு கூடிய இளம்பிஞ்சு _____**

(அ) பிஞ்சு (ஆ) பூம்பிஞ்சு (இ) வடு (ஈ) மூசு

**48. இளம் காய் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

(அ) பிஞ்சு ஆ) பூம்பிஞ்சு (இ) வடு (ஈ) மூசு

**49. மூசு என்று அழைக்கப்படுவது எது?**

அ) மாம்பிஞ்சு ஆ) பூம்பிஞ்சு

(இ) பலாப்பிஞ்சு (ஈ) எள்பிஞ்சு

**50. கவ்வை என்று அழைக்கப்படுவது எது?**

அ) மாம்பிஞ்சு ஆ) பூம்பிஞ்சு

(இ) பலாப்பிஞ்சு (ஈ) எள்பிஞ்சு

**51. தென்னை, பனை முதலியவற்றின் இளம் பிஞ்சு எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

(அ) குரும்பை ஆ) பூம்பிஞ்சு (இ) வடு (ஈ) மூசு

**52. நுழாய் என்று அழைக்கப்படுவது எது?**

(அ) இளநெல் ஆ) பூம்பிஞ்சு
(இ) பலாப்பிஞ்சு (ஈ) இளம்பாக்கு

**53. கருக்கல் என்று அழைக்கப்படுவது எது?**

(அ) இளநெல் ஆ) பூம்பிஞ்சு
(இ) பலாப்பிஞ்சு (ஈ) இளம்பாக்கு

**54. கச்சல் எனப்படுவது எது?**

(அ) வாழைப்பிஞ்சு ஆ) பூம்பிஞ்சு
(இ) பலாப்பிஞ்சு (ஈ) இளம்பாக்கு

**55. பொருத்தி விடை தேர்க**

**a) பூம்பிஞ்சு - 1) இளம் காய்**
**b) பிஞ்சு - 2) பூவோடு கூடிய இளம்பிஞ்சு**
**c) வடு - 3) பலாப்பிஞ்சு**
**d) மூசு - 4)** மாம்பிஞ்சு

(அ) 2,4,1,3 ஆ) 2,1,4,3 (இ) 4,3,2,1 (ஈ) 4,1,2,3

**56. பொருத்தி விடை தேர்க**

**a) கவ்வை - 1) பனை**
**b) குரும்பை - 2) இளநெல்**
**c) கருக்கல் - 3) இளம்பாக்கு**
**d) நுழாய் - 4) எள்பிஞ்சு**

(அ) 2,4,1,3 ஆ) 2,1,4,3 (இ) 4,3,2,1 (ஈ) 4,1,2,3

**57. பொருந்தாத இணைகளைத் தேர்க.**

**1) கச்சல் - வாழைப்பிஞ்சு**
**2) மூசு - பலாப்பிஞ்சு**
**3) நுழாய் - மாம்பிஞ்சு**
**4) வடு - இளம்பாக்கு**

(அ) 2,3 ஆ) 2,1 (இ) 4,3 (ஈ) 4,1

**58. அவரை, துவரை முதலியவற்றின் குலை எவ்வாறு அழைக்கப்படும்?**

(அ) கதிர் ஆ) தாறு (இ) கொத்து (ஈ) குலை

**59. கொடி முந்திரி போன்றவற்றின் குலை**

(அ) கதிர் ஆ) தாறு (இ) கொத்து (ஈ) குலை

**60. வாழைக்குலை எவ்வாறு அழைக்கப்படும்?**

(அ) கதிர் (ஆ) தாறு (இ) கொத்து (ஈ) குலை

**61. கேழ்வரகு, சோளம் முதலியவற்றின் கதிர் எவ்வாறு அழைக்கப்படும்?**

(அ) கதிர் (ஆ) தாறு (இ) கொத்து (ஈ) குலை

**62. நெல், தினை முதலியவற்றின் கதிர் (or) குலை எவ்வாறு அழைக்கப்படும்?**

(அ) கதிர் (ஆ) தாறு
(இ) கொத்து (ஈ) அலகு அல்லது குரல்

**63. வாழைத்தாற்றின் ஒரு பகுதி எவ்வாறு அழைக்கப்படும்?**

(அ) கதிர் (ஆ) சீப்பு
(இ) கொத்து (ஈ) அலகு அல்லது குரல்

**64. பொருந்தாத இணைகளைத் தேர்க.**

**1) கொத்து - அவரை**
**2) குலை - முந்திரி**
**3) கதிர் - துவரை**
**4) சீப்பு - திராட்சை**

(அ) 2,3 (ஆ) 2,1 (இ) 4,3 (ஈ) 4,1

**65. நுனியில் சுருங்கிய காய் ________**

(அ) சூம்பல் (ஆ) சிவியல் (இ) வெம்பல் (ஈ) அளியல்

**66. சுருங்கிய பழம் ________**

(அ) சூம்பல் (ஆ) சிவியல் (இ) வெம்பல் (ஈ) அளியல்

**67. புழுபூச்சி அரித்த காய் அல்லது கனி________**

(அ) சூம்பல் (ஆ) சிவியல் (இ) வெம்பல் (ஈ) சொத்தை

**68. குளுகுளுத்த பழம்________**

(அ) அளியல் (ஆ) சிவியல்
(இ) வெம்பல் (ஈ) சொத்தை

**69. குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய்____**

(அ) அளியல் (ஆ) அழுகல் (இ) வெம்பல் (ஈ) சொத்தை

**70. பதராய்ப் போன மிளகாய் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

(அ) அல்லிக்காய் (ஆ) அழுகல்
(இ) சொண்டு (ஈ) சொத்தை

**71. தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய்____**

(அ) அல்லிக்காய் (ஆ) அழுகல்
(இ) தேரைக்காய் (ஈ) ஒல்லிக்காய்

**72. தென்னையில் கெட்ட காய் ________**

(அ) அல்லிக்காய் (ஆ) அழுகல்
(இ) தேரைக்காய் (ஈ) ஒல்லிக்காய்

**73. வரகு, கேழ்வரகு முதலியவற்றின் உமி ____ எனப்படும்**

(அ) மட்டை (ஆ) உமி (இ) கொம்மை (ஈ) குடுக்கை

**74. பொருத்தி விடை தேர்க**

**a) தொலி - 1) திண்ணமானது**
**b) தோல் - 2) மிகமிக மெல்லியது**
**c) தோடு - 3) மிக வன்மையானது**
**d) ஓடு - 4) வன்மையானது**

(அ) 2,4,1,3 (ஆ) 2,1,4,3 (இ) 4,3,2,1 (ஈ) 4,1,2,3

**75. பொருத்தி விடை தேர்க**

a) குடுக்கை -1) வரகு, கேழ்வரகு முதலியவற்றின் உமி
b) மட்டை -2) நெல்,கம்பு முதலியவற்றின் மூடி
c) உமி -3) தேங்காய் நெற்றின் மேற்பகுதி
d) கொம்மை - 4) சுரையின் ஓடு

(அ) 2,4,1,3 (ஆ) 2,1,4,3 (இ) 4,3,2,1 (இ) 4,1,2,3

**76. நெல், கம்பு முதலிய தானியங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?**

(அ) கூலம் (ஆ) பயறு (இ) விதை (ஈ) காழ்

**77. அவரை, உளுந்து முதலியவை எவ்வாறு அழைக்கப்படுகின்றன?**

(அ) கூலம் (ஆ) பயறு (இ) விதை (ஈ) காழ்

**78. கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து எவ்வாறு அழைக்கப்படுகின்றன?**

அ) கூலம் (ஆ) பயறு (இ) விதை (ஈ) காழ்

**79. புளி, காஞ்சிரை முதலியவற்றின் வித்து எவ்வாறு அழைக்கப்படுகின்றன?**

(அ) கூலம் (ஆ) பயறு (இ) விதை (ஈ) காழ்

**80. அவரை, துவரை முதலிய பயறுகளின் வித்து எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) கூலம் (ஆ) முதிரை (இ) விதை (ஈ) காழ்

**81. பொருத்தி விடை தேர்க**

**a) முத்து -1) மா, பனை முதலியவற்றின் வித்து**

**b) கொட்டை - 2) தென்னையின் வித்து**

**c) தேங்காய் -3) நெல்,கம்பு முதலியதானியங்கள்**

**d) கூலம் - 4) வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின்வித்து**

(அ) 2,4,1,3 (ஆ) 2,1,4,3 (இ) 4,3,2,1 (ஈ) 4,1,2,3

**82. நெல், கத்தரி முதலியவற்றின் இளநிலை _**

(அ) நாற்று (ஆ) கன்று (இ) குருத்து (ஈ) பிள்ளை

**83. மா , புளி, வாழை முதலியவற்றின் இளநிலை**

(அ) நாற்று (ஆ) கன்று (இ) குருத்து (ஈ) பிள்ளை

**84. வாழையின் இளநிலை**

(அ) நாற்று (ஆ) கன்று (இ) குருத்து (ஈ) பிள்ளை

**85. தென்னையின் இளநிலை**

(அ) நாற்று (ஆ) கன்று (இ) குருத்து (ஈ) பிள்ளை

**86. நெல்,சோளம் முதலியவற்றின் பசும் பயிர் எவ்வாறு அழைக்கப்படும்?**

(அ) பைங்கூழ் (ஆ) மடலி (இ) குருத்து (ஈ) பிள்ளை

**87. பொருந்தாத இணைகளைத் தேர்க.**

**1) மடலி - பனையின் இளநிலை**

**2) குருத்து - தென்னையின் இளநிலை**

**3) பிள்ளை - வாழையின் இளநிலை**

**4) குட்டி - விளாவின் இளநிலை**

(அ) 2,3 (ஆ) 2,1 (இ) 4,3 (ஈ) 4,1

**88. இலை என்பதைக் குறிக்காத சொல்?**

(அ) கழை (ஆ) தாள் (இ) தோகை (ஈ) ஓலை

**89. வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய ____ தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளைவதில்லை.**

(அ) சிறுகூலங்கள் (ஆ) பெருங்கூலங்கள்

(இ) தோகைகள் (ஈ) ஓலைகள்

**90. '*உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவே. மாநாட்டுக்குரிய அம்முதல் மொழியும் தமிழே'***

**- என்று கூறியவர்**

(அ) க. அப்பாத்துரையார் (ஆ) தேவநேயப்பாவாணர்

(இ) இரா.இளங்குமரனார் (ஈ) பெருஞ்சித்திரனார்

**91. "திருவள்ளுவர் தவச்சாலை" என்ற ஒன்றை அமைத்தவர் யார்?**

(அ) க. அப்பாத்துரையார் (ஆ) தேவநேயப்பாவாணர்

(இ) இரா.இளங்குமரனார் (ஈ) பெருஞ்சித்திரனார்

**92. தமிழ்த்தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கொண்டவர் யார்?**

(அ) க. அப்பாத்துரையார் (ஆ) தேவநேயப்பாவாணர்

(இ) இரா.இளங்குமரனார் (ஈ) பெருஞ்சித்திரனார்

**93. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர் யார்?**

(அ) க. அப்பாத்துரையார் (ஆ) தேவநேயப்பாவாணர்

(இ) இரா.இளங்குமரனார் (ஈ) பெருஞ்சித்திரனார்

**94. உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர் யார்?**

(அ) க. அப்பாத்துரையார் (ஆ) தேவநேயப்பாவாணர்

(இ) இரா.இளங்குமரனார் (ஈ) பெருஞ்சித்திரனார்

**95. போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் லிசுபனில், 1554இல் கார்டிலா என்னும் நூல் முதன் முதலாக எந்த மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது?**

(அ) தமிழ் (ஆ) தெலுங்கு

(இ) கன்னடம் (ஈ) மலையாளம்

**96. இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறிய மொழி எது?**

(அ) தமிழ் (ஆ) தெலுங்கு

(இ) கன்னடம் (ஈ) மலையாளம்

**97. நில வகை, நன்செய் வகை, வேலி வகை ஆகியவற்றைப் பற்றி விளக்கியவர்?**

(அ) க. அப்பாத்துரையார் (ஆ) தேவநேயப்பாவாணர்

(இ) இரா.இளங்குமரனார் (ஈ) பெருஞ்சித்திரனார்

**98. வடலி என்பது _______**

(அ) வாழையின் இளநிலை

(ஆ) தென்னையின் இளநிலை

(இ) விளாவின் இளநிலை (ஈ) பனையின் இளநிலை

**99. பழங்களின் மேற்பகுதி மிக மிக மெல்லியதாக இருந்தால் ________ என்பர்**

(அ) தொலி (ஆ) தோல் (இ) தோடு (ஈ) ஓடு

**100. கச்சல் என்பது __ இன் பிஞ்சு வகை**

(அ) வாழை (ஆ) பலா (இ) தேங்காய் (ஈ) புளி

**101) கார்டிலா என்ற நூல் தமிழ் மொழியில் அச்சிடப்பட்ட ஆண்டு எது?**

(அ) 1550 (ஆ) 1552 (இ) 1554 (ஈ) 1556

**102) முதன் முதலாக அச்சடிக்கப்பட்ட தமிழ் நூலின் வண்ணம்**

(அ) கருப்பு (ஆ) சிவப்பு

(இ) கருப்பு மற்றும் சிவப்பு (ஈ) சிவப்பு மற்றும் பச்சை

**103) தமிழகத்தில் விளையும் சம்பா நெல் வகைகள் மொத்தம்**

(அ) 50 (ஆ) 40 (இ) 60 (ஈ) 72

**104) முதன் முதலாகத் தமிழ்மொழியில் மொழிப்பெயர்க்கப்பட்ட நூல்?**

அ) கார்டிலா ஆ) குளந்தங்கரை

இ) அச்சுக்கலை ஈ) மொழித்தோற்றம்

# கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வுக்கு

**வலுசேர்க்கும் வகையில்.....**

**2024 - 2025 ஆம் ஆண்டின் தேர்விற்கு பயிற்சி பெறும் வகையில், Online Full Test (மாதிரி தேர்வு) பயனுள்ள முறையில் பயிற்சி பெறுவதற்கான வினாத் தொகுப்பு குறைந்தபட்ச கட்டணத்தில் www.tcaexamguide.com எனும் website -ல் login செய்து (ம) QR Scan செய்து பயிற்சி பெறலாம்.**




**PREPARE + PRACTICE + PRESENT = SUCCESS**

TCA

TCA

**அனைவரும் தேர்வில் வெற்றிப்பெற வாழ்த்துகள்**

**Tcaexamguide - Website; Facebook; Play Store; Email**

# TEACHER'S CARE PUBLICATION

HEAD OFFICE : 21/46, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1.
CONTACT : 95665 35080, 97862 69980

**BRANCH OFFICES**

Branch Office 1 : 14, 1st Floor, 63 KPRS Tower, Thennur High Road, Trichy-620017.

Branch Office 2 : 266-C, Advaitha Ashram Road, (Opp. To New Bus Stand), Salem-636004

Branch Office 3 : 23, North Veliveethi, Pooja Complex, Simmakkal, Madurai- 625001

TRICHY : 76399 67359, SALEM : 9360268118, MADURAI : 96555 37380

Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide

# கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வு

# 2024 - 2025

## PG TRB, UG TRB, SG TRB, TRB BEO & TNPSC

## CTET – SPECIAL GUIDE

**MORE INFORMATION**

Website : www.tcaexamguide.com

Play Store : tcaexamguide

Mail : tcaexamguide@gmail.com

facebook : tcaexamguide

Whatsapp : 95665 35080

Mobile : 97862 69980; 93602 68118; 76399 67359; 9655537380




Teachers care Academy is the foremost coaching Institution for various competitive examinations such as P.G.TRB, TET Papers I &II TNPSC including special Teachers Eligibility Test. The Academy was established on 5th April 2013 by learned energetic and multifaceted chairperson Mrs. RAVIMAGESHWARI in the holy temple town of Kanchipuram.

# Our Other Competitive Exam. Guides

- PG-TRB (Tamil, English, Mathematics, History, Physics, Chemistry, Commerce, Economics, Botany, Zoology)
- Polytechnic-TRB (English, Mathematics, Physics, Chemistry, CSE, ECE, Civil, EEE, Mech)
- Computer Instructor Grade-1
- Block Educational Officer
- Teachers Eligibility Test (TET Paper-1 & Paper-2) & UG-TRB
- TNEB – Assessor
- Tamil Nadu – Forest Guard
- TNPSC ( Group-1, Group-2, Group-3, Group-4)
- NEET

*Your Success is Our Goal....*

Teachers Care Academy

tcaexamguide

tcaexamguide@gmail.com

www.tcaexamguide.com


**Teachers Care Publication**

38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1

Mobile : 95665 35080, 97862 69980

Help Line Numbers : 9360268118 7639967359

1st Edition